**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **CC 50/2021** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | | **Prosecution :** | **PW - 1** |
| | | **Defence :** | |
| | | **Court :** | |
| Name | : | திருமதி சுபாஷினி | |
| Father's / Husband Name | : | கோபி | |
| Village | : | 40,பழனியாண்டவர் சன்னதி தெரு,கும்பகோணம், | |
| Taluk | : | கும்பகோணம் தஞ்சாவூர் மாவட்டம். | |
| Caste & Religion | : | இந்து | |
| Calling | : | வீட்டு குடித்தனம் | |
| Age | : | 34-2021 | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.09.2021**

**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி.ஜெயந்தி (பெஞ்ச் கிளார்க்)படி நிலை 3, எம், செழியன், தட்டச்சர்**

**CC 32/2016** Date: 20.09.2021

முதல் விசாரணை :

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகின்றேன். கடந்த 24.01.2021 அன்று நானும் எனது கணவரும் கும்பகோணத்தில் இருந்து இரவு 7.00 மணிக்கு தஞ்சாவூர் இரவு 9.00 மணிக்கு வந்தேன். இங்கிருந்து என் அம்மா வீட்டிற்கு செல்வதற்காக தொம்பன் குடிசை பஸ் நிறுத்தத்தில் இறங்கினேன். அங்கிருந்து ஆட்டுக் காரத் தெருவிற்கு நடந்து சென்று கொண்டு இருந்தோம். பைக்கில் இரண்டு நபர்கள் எனக்கு முன்பாக வேகமாக வந்தார்கள். அதில் ஒரு நபர் என் கழுத்தில அணிந்திருந்த 3 1/2 பவுன் தங்கச் செயினை பறித்து சென்று விட்டார்கள். நான் சத்தம் போட்டேன். அவர்கள்

வேகமாக சென்று விட்டார்கள். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அங்கு வந்து விட்டார்கள். என் கணவர் செயின் பறித்தவர்களை துரத்தினார். ஆனால் அவர்கள் தப்பி விட்டார்கள். ஆஜர் இரண்டு எதிரிகள் தான் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அதில் இன்று பச்சை நிற சட்டை அணிந்து இருப்பவர் என் கழுத்தில் இருந்த செயினை அறுத்தார். (பச்சை நிற சட்டை அணிந்த நபர் கார்த்திகேயன்) பின்னர் மறுநாள் கிழக்கு காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் மனுவை எனது கணவர் எழுதினார். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். 10 நாட்கள் கழித்து நகை கிடைத்து விட்டதாக போலீசார் தகவல் தெரிவித்தார்கள். நான் காவல் நிலையம் சென்று எனது நகையை அடையாளம் காண்பித்தேன். பின்னர் நான் நீதிமன்றத்தில் மனு அளித்து இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றேன். அந்த நகையை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன். அந்த தங்க செயின் அசா.பொ.1 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ள நகை என்னுடையது. அந்த புகைபடம் அ.சா.பொ.2 ஆகும். மற்றும் அதனுடன் கூடிய வட்டதகடு அ.சா.பொ.3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள். ( அ.சா.பொ1 தங்க செயினை அ.சா.1 மனுவின் பேரில் அ.சா.1 வசம் மீண்டும் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காவல் நிலையத்திற்கு இரவு 11.30 மணிக்கு சென்றேன். நானும் எனது கணவரும் காவல் நிலையம் சென்றோம். நாங்கள் கும்பகோணத்தில் இருந்து தனியார் பேருந்தில் தஞ்சாவூர் வந்தோம். நாங்கள் பேருந்தில் வந்ததற்கான பயண சீட்டை போலீசாரிடம் கொடுத்துள்ளேன். நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எழுத படிக்க தெரியும். எனது கணவர் பி.காம் வரை படித்துள்ளார். சம்பவ இடத்தில் இருட்டாக இருந்ததாக நானும் எனது கணவரும் வேகமாக நடந்து சென்றோம் என்று சொன்னால் சரிதான். போலீசார் என்னை மீண்டும் காவல் நிலையத்திற்கு அழைத்த தேதி, மாதம் ஞாபகம் இல்லை. நான் காவல் நிலையத்திற்கு நகையை அடையாளம் காட்ட சென்றபோது எதிரிகள் இருவரும் காவல் நிலையத்தில் இருந்தார்கள். அப்போது போலீசார் என்னிடம் இந்த எதிரிகள்தான் உன்னிடம் செயினை பறித்து சென்றார்கள் என்று சொன்னார்கள். அவர்களை என்னிடம்

அடையாளம் காட்டினார்கள். அப்போது காலை 11.00 மணி இருக்கும். அப்போது

காவல் நிலையத்தில் போலீசாரும் இந்த எதிரிகள் இருவரும் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். அப்போது எதிரிகளுக்கு காயங்கள் எதுவும் இருந்ததா என்றால் காயம் எதுவும் இல்லை. நகைக்கான பில் எதுவும் போலீசாரிடம் கொடுக்கவில்லை. நான் காவல் நிலையத்தில் செயினை என்னிடம் கொடுத்தார்களா என்றால் காவல் நிலையத்தில் செயினை கொடுக்கவில்லை. நீதிமன்றத்தில் இருந்துதான் செயினை பெற்றுச் சென்றேன். போலீசார் என்னை ஒரு தடவைதான் விசாரித்தார்கள். போலீசாரிடம் ஒருதடவைதான் கையெழுத்து செய்து கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்துதான் காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்தேன். நான் காவல் நிலையம் சென்றபோது, கோபி, மூர்த்தி, சுந்தரராமன், மணிகண்டன், சீனிவாசன், ஆறுமுகம், கே.ஆர். சரவணன், வி.கே.குமார் ஆகியோர்கள் என்னுடன் வந்தார்களா என்றால் வந்தார்கள். அவர்களிடமும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். வந்தவர்களில் எனது உறவினர்களும், நண்பர்களும் அடங்குவர். களவு போனது எனது நகை என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், எதிரிகள் நிரபராதி என்று சொன்னால் சரியல்ல. நடந்த சம்பவம் பற்றி நானும் எனது கணவரும் சொல்ல போலீசார் புகாரை எழுதினார்களா என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு. என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-1
தஞ்சாவூர்(முகூபொ)

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.1, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **CC 50/2021** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | | Prosecution : | **PW - 2** |
| | | Defence : | |
| | | Court : | |
| Name | : | திரு கோபி | |
| Father's / Husband Name | : | சங்கரநாதன் | |
| Village | : | 40, பழனியாண்டவர் சன்னதி தெரு, கும்பகோணம், | |
| Taluk | : | கும்பகோணம் தஞ்சாவூர் மாவட்டம். | |
| Caste & Religion | : | இந்து | |
| Calling | : | பொம்மலாட்ட கலைஞர் | |
| Age | : | 39-2021 | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.09.2021**

**என்னால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி.ஜெயந்தி (பெஞ்ச் கிளார்க்)படி நிலை 3, எம், செழியன், தட்டச்சர்**

**CC 50/2021** Date: 20.09.2021

முதல் விசாரணை :

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பொம்மலாட்ட கலைஞராக வேலை செய்து வருகின்றேன். அ.சா.1 சுபாஷினி எனது மனைவி ஆவார். கடந்த 24.01.2021 அன்று இரவு 9.40 மணியளவில் ஆட்டுக் காரத்தெருவில் ஜெயபால் மளிகைகடை முன்பாக நானும் எனது பெரிய மகனும் நடந்து சென்று கொண்டு இருந்தோம். எங்களுக்கு முன்பாக என் மனைவியும் எங்கள் இளைய மகனும் நடந்து சென்று கொண்டு இருந்தார்கள். எதிர் திசையில் இருநது பைக்கில் இரண்டு நபர்கள் வந்தார்கள். பைக்கிற்கு பின்னால் உட்கார்ந்து இருந்த நபர் எனது மனைவி

அணிந்திருந்த 3 1/2 பவுன் தங்க செயினை பறித்து சென்றார். என் மனைவி சத்தம் போட்டார். நானும் அந்த பகுதியில் இருந்த மக்களும் அந்த இருசக்கர வாகனத்தை பின்தொடர்ந்தோம். ஆனால் அவர்கள் வேகமாக சென்றுவிட்டார்கள். ஆஜர் எதிரிகளில் பச்சை நிற சட்டை அணிந்து இருப்பவர் (கார்த்திகேயன்) என் மனைவி கழுத்தில் இருந்து செயினை பறித்தவர் ஆவார். பைக்கை ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரிகளில் வெள்ளை கருப்பு நிற கோடுபோட்ட சட்டை அணிந்து இருப்பவர் ஆவார். (ஹரிபிரபு) அவர்களை பிடிக்க முடியவில்லை. பின்னர் தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் புகார் கொடுக்கச் சென்றபோது எங்களுடன் மூர்த்தி, சுந்தரராமன், மணிகண்டன், சீனிவாசன், ஆறுமுகம், கே.ஆர். சரவணன், வி.கே.குமார் ஆகியோர்கள் வந்தார்களா என்றால் வந்தார்கள். எங்களுடன் வந்தவர்களிடம் போலீசார் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள் என்றால் சரிதான். நகையை அடையாளம் காட்ட அ.சா.1 காவல் நிலையம் சென்றபோது நானும் உடன் சென்றேன். நகையை அடையாளம் காட்ட சம்பவம் நடந்ததில் இருந்து 1 மாதத்திற்குள் காவல் நிலையத்திற்கு சென்றோம். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் காவல் நிலையத்தில் இருந்தார்கள். புகார் கொடுத்தது எனது மனைவி என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், எதிரிகள் நிரபராதி என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு. என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-1
தஞ்சாவூர்(முகூபொ)